உடன்பிறப்பே... 85

நீரை.மகேந்திரன்

ஓவியம் : ரவி பேலட்



‘முரட்டுத் தொண்டர்!’ என்.கிட்டப்பா

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த என்.கிட்டப்பா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

1951-ஆம் ஆண்டு இன்றைய மயிலாடுதுறை நகரில் கழகத்தின் தஞ்சை மாவட்ட மாநாடு நடைபெற்றது. அங்கு உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, “தமிழ்நாட்டின் பட்டிதொட்டி எங்கும், மூலைமுடுக்குகள் எங்கும் கருப்பு சிவப்பு இருவண்ணக்கொடி கட்டாயம் பறக்க வேண்டும், அல்லது திராவிடர் கழகக் கொடி பறக்க வேண்டும். எதிரிகள் தாக்கும்போது தி.மு.கழகமும், திராவிடர் கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இயங்கும்” என முழங்கினார். அந்த முழக்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார் 20 வயது முரட்டு இளைஞர் ஒருவர். அவர்தான், பின்னாட்களில் மாயவரம் என்கிற மயிலாடுதுறையைக் கழகக் கோட்டையாக மாற்றிய கிட்டப்பா. இன்றைக்கும் அவர் பெயரை மறக்காமல் ‘கிட்டப்பா ஸ்கூல்’ என்றும் ‘கிட்டப்பா அங்காடி’ என்றும் உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர் மயிலாடுதுறை மக்கள். ‘முரட்டுத் தொண்டர்’ என்றால், அப்படி ஒரு முரட்டுத் தொண்டர் அவர்.

1951-ஆம் ஆண்டு பள்ளியிறுதி வகுப்பு முடித்தவருக்கு, சிதம்பரம் நகராட்சியில் எழுத்தர் வேலை கிடைத்தது. ஆனால், அந்தப் பணியை வேண்டாம் என உதறிவிட்டு, முழுநேரமாக கழகப் பணியே உயிர்மூச்சு என மாயவரம் பகுதிகளில் சைக்கிளில் வலம் வந்து கட்சி வளர்த்த முன்னோடி.

கிட்டப்பாவின் தந்தை நடேசன், மயிலாடுதுறை ரயில் நிலையத்தில் ரயில்வே பயணச்சீட்டு முகவராக இருந்தவர். அதனால், ஓரளவு நடுத்தர வசதி கொண்ட குடும்பம். *1931*-ஆம் ஆண்டு பிறந்த கிட்டப்பா வீட்டுக்கு கடைக்குட்டி என்பதால் அதிகமாக செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டவர்.

பள்ளியில் படிக்கும் காலத்திலேயே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, அவரது தந்தை அதை ஆதரிக்கச் செய்தார். நகராட்சி மன்றம் நடத்தி வந்த உயர்நிலைப் பள்ளியில் படித்த கிட்டப்பா, பள்ளியில் படிக்கும் காலத்திலேயே பேரறிஞர் அண்ணாவை அழைத்து வந்து, இலக்கிய மன்ற சொற்பொழிவு நிகழ்ச்சியை நடத்தி, தனது அரசியல் பயணத்தைத் தொடங்கியவர்.

அண்ணா வளர்ப்பு

கழகம் தொடங்கி நான்கு ஆண்டுகளில் மாயவரம் சுற்றுவட்டாரத்தில் பெயர் அறியப்பட்டவராக விளங்கியவர் கிட்டப்பா. அவர் முரட்டுத் தொண்டர் என்பதற்கு ஏற்ப, ஒரு சம்பவத்தைத் தனது ‘அண்ணா சில நினைவுகள்’ நூலில் குறிப்பிடுகிறார் கவிஞர் கருணானந்தம்.

“ஒருமுறை, மாயவரம் நகரில் பேரறிஞர் அண்ணா கலந்துகொண்ட பொதுக்கூட்டம். கிட்டப்பாவுக்கு என ஒதுக்கப்பட்ட நாற்காலியில் மற்றொரு கழகத் தொண்டர் அமர்ந்து விட்டார். அதைக் கண்டு வெகுண்டு கடும் சொற்கள் உதிர்த்துள்ளார்.

நிகழ்ச்சி முடிந்து, கவிஞர் கருணானந்தம் வீட்டுக்கு அண்ணா ஓய்வெடுக்க வந்தபோது, கிட்டப்பாவின் கோபம் குறித்து பேச்சு எழுந்துள்ளது. ‘பின்னே என்னங்க, தலைவர் வரும்போது மட்டும் மேடையில உட்கார வர்றாங்க, மத்த நாளில் கட்சிப் பணிக்கோ, வசூலுக்கோ வருவதில்லை, அவங்களுக்கு எதுக்கு நாற்காலி?’ என எதிர்க்கேள்வி கேட்டுள்ளார் கிட்டப்பா. அப்படி, கழகத்தின் அடித்தளப் பணிகளில் தீர்க்கமாக செயல்பட்டவர். அன்று அண்ணாதான், கிட்டப்பாவைச் சமாதானப்படுத்தி சாப்பிட வைத்துள்ளார்.

‘கிட்டப்பா முன்கோபியே தவிர, கொள்கைப் பற்றுள்ள இளைஞர். அவரை வளர்த்தெடுக்க வேண்டும்’ என அண்ணா தன்னிடம் கூறியதாக, கவிஞர் கருணானந்தம் குறிப்பிடுகிறார். தனிப்பட்ட ஒரு தொண்டனை உருவாக்கிட, ஒரு மாபெரும் இயக்கத்தின் தலைவர் அவ்வளவு சிரத்தையும் அக்கறையும் எடுத்துக் கொண்டார் என்பதை, ஒவ்வொரு முன்னோடியின் வரலாற்றில் இருந்தும் அறிய முடியும். அந்த வகையில், பேரறிஞர் அண்ணாவின் அக்கறையில் இருந்து உருவானவர் கிட்டப்பா.

கல்லக்குடிப் போராட்டம்

1953-ஆம் ஆண்டு, கல்லக்குடிப் போராட்டத்தில் கலந்துகொண்டு கலைஞருடன் சிறை சென்ற வீரர். அன்று தொடங்கி, அவர் இறக்கும்வரை கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு உறுதியுடன் நின்றவர். ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட முன்னோடிகளான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி, தாழை.மு. கருணாநிதி உள்ளிட்ட தலைவர்களுடன் இணைந்து பயணித்தவர். ஒருங்கிணைந்த மாவட்டத் துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

அண்ணாவால் உருவாக்கப்பட்டு, கலைஞரால் வளர்க்கப்பட்ட கிட்டப்பா,

கிட்டப்பாவுக்கு மாயவரம் மக்கள் விருப்பத்துடன் கார் அன்பளிப்பு செய்தனர். அந்த காரை அவர் கழகப் பணிக்கே பயன்படுத்தினார்.

1967-ஆம் ஆண்டு தேர்தலில் மயிலாடுதுறை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வானார். அண்ணாவுக்குப் பின்னர் கலைஞரின் தலைமையை ஏற்றுக்கொண்டு கட்சிக்காக நின்றவர். அதன்பின்னர் நடந்த அடுத்தடுத்த 4 தேர்தல்களில் மயிலாடுதுறை தொகுதியில் இருந்து தேர்வானவர். அந்த அளவுக்குக் கழகத்தின் செல்வாக்கைக் கட்டி எழுப்பியவர் கிட்டப்பா.

1967-ஆம் ஆண்டு, முதன்முதலில் எம்.எல்.ஏ. ஆனதும், கழகச் சட்டமன்ற உறுப்பினரான கிட்டப்பாவுக்கு மாயவரம் மக்கள் விருப்பத்துடன் கார் அன்பளிப்பு செய்தனர். அந்த காரை அவர் கழகப் பணிக்கே பயன்படுத்தினார். படிக்கும் காலத்தில் அண்ணாவை அழைத்து வர வாடகை கார் அமர்த்திய கிட்டப்பா, தொகுதி மக்கள் அளித்த காரை அண்ணாவை அழைத்து வந்து வழங்க வைத்ததுடன், அதில் அண்ணாவைப் பயணிக்கவும் வைத்து அழகுபார்த்தார்.

முக்கியமாக அண்ணாவின் அமைச்சரவை, கலைஞர் அமைச்சரவையில் கோரிக்கைகளுடனும், எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் கேள்விகளுடனும் துளைத்து எடுப்பவர் என பெயர் பெற்றவர். அதனால் ‘கேள்வி மன்னன் கிட்டப்பா’ என்கிற அடைமொழியுடன் அழைக்கப்பட்டார். கலைஞர் சில நேரங்களில், கிட்டப்பாவிடம் “கிட்டப்பா... கிட்டாதப்பா” என்று சிலேடையாகச் சொன்ன நிகழ்வுகளும் உள்ளன.

‘மாயவரம்’ என்கிற வடமொழியில் அமைந்த ஊர் பெயரை மயிலாடுதுறை என அழகுத் தமிழில் மாற்றவேண்டும்’ எனவும், ‘தஞ்சை மாவட்டத்தைப் பிரித்து, மயிலாடுதுறையைத் தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் பிரிக்க வேண்டும்’ என்றும் தொடர்ந்து சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவர் கிட்டப்பா. அந்த இரண்டு கோரிக்கைகளில் ஊர் பெயர் மாற்றும் கோரிக்கையை மட்டும் ஏற்றுக்கொண்டு *1982*-ஆம் ஆண்டு அரசாணை வெளியிட்டார் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். ‘பெயரை மாற்றக்கூடாது’ எனச் சிலர் எதிர்த்தபோது, கலைஞர் பெயர் மாற்றத்தை வரவேற்றார். கிட்டப்பா தலைமையில் அரசு விழாவில் கலந்துகொண்டு ஆதரித்தனர் கழகத்தினர்.

அரசியல் சூழ்ச்சிகள்

அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியதற்கு எம்.ஜி.ஆருக்கு ஓர் அரசியல் காரணம் இருந்தது. ஒன்று கிட்டப்பாவைத் தன் பக்கம் இழுக்க வேண்டும் என்கிற அவரது எண்ணம். மற்றொன்று, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் 20 சட்டமன்றத் தொகுதிகளில் 18 தொகுதிகளை தி.மு.கழகம் தன் வசம் வைத்திருந்தது. அதிலும் கீழத் தஞ்சையில் இருந்து அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினராக ஒருவரும் இல்லை. அந்த எஃகு கோட்டையை உடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், எம்.ஜி.ஆர் மயிலாடுதுறையைத் தனி மாவட்டமாக்கினால், கிட்டப்பாவுக்கு மாவட்டச் செயலாளர் பதவி கிடைக்கும் என தூது விட்டார்.

ஆனால், அதற்கு மயங்காத கிட்டப்பா, சில நாட்களில் சாதாரண காரணத்துக்காக மனம் மாறியது, கழகத்தினருக்கே அதிர்ச்சிதான். அதை விடவும் அதிகம் வருந்திய கிட்டப்பா, அடுத்த 3 மாதங்களில், *1983*-ஆம் ஆண்டு நவம்பர் 11-ஆம் தேதி இயற்கை எய்தினார். அவர் யாருக்காக மனம் மாறினாரோ அவர்கள் யாரும் இறப்புக்கு வரவில்லை. ஆனால், கலைஞர் சென்று நின்றார். அடுத்த சில மாதங்களில் அங்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், கழகம் வெற்றிபெற்று புதிய எழுச்சியை உருவாக்கியது.

இறப்புக்குப் பின்னும் கிட்டப்பாவின் செல்வாக்குதான் கழகத்தின் வெற்றியாக கொண்டாடப்பட்டது. அவரது நினைவுகள் அழியாது, அழியக்கூடாது என்பதால்தான் *1989*-இல் ஆட்சிக்கு வந்த கலைஞர் மயிலாடுதுறையில் அவர் பெயரை பள்ளிக்குச் சூட்டி உத்தரவிட்டார். அவரது பெயரில், நகராட்சிக் கட்டடம் உருவாக்கினார். கிட்டப்பாவை கலைஞர் மறுதலிக்கவில்லை, மறக்கவில்லை. தனது அன்பு உடன்பிறப்பாக என்றும் நினைத்திருந்தார். அது என்றென்றைக்கும் தொடரும்.

...துடிக்கும்

தமிழ்நாட்டின் தொழில்நுட்பம்!

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களில் முக்கியமானது, ‘ஆயுள் காப்பீட்டு நிறுவனம்’. அந்த நிறுவனத்தின் இணையதளம் வழியாகக் குறுக்கு வழியில் இந்தியைத் திணிக்க முயன்று, எதிர்ப்புகளுக்குப் பிறகு விலக்கிக் கொள்ளப்பட்டது. அதற்குப் பத்திரிகையாளார் கோவி.லெனின் குறிப்பிட்டுள்ள விளக்கம் நெத்தியடி என பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

“எல்.ஐ.சி. நிறுவனத்தின் தொழில்நுட்பக் கோளாறு சரி செய்யப்பட்டது. சரி செய்தவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பயன்படுத்திய தொழில்நுட்பம்? வழக்கம்போல ஒன்றிய அரசின் மூஞ்சியில் காரித் துப்பியதுதான். வழக்கம்போல துப்புனதும் தொடச்சுக்கும். தொழில்நுட்பம் சரியாயிடும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரத்தில், கோடிக்கணக்கான மக்களின் ஆயுள் காப்பீடு தொடர்பாக நம்பிக்கையைப் பெற்று, பெரும் தொகையைத் திரட்டி வைத்துள்ள இந்த நிறுவனத்தின் நற்பெயரை நாசம் செய்ததுபோல, மதிப்பையும் சரித்து வருகிறது, ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு.

கடந்த 10 ஆண்டுகளில், ஊழியர்களின் சேமநல நிதி அமைப்பிலிருந்தும், ஆயுள் காப்பீடு நிறுவனத்தில் இருந்தும் பலகோடி ரூபாய் தொகையை முதலீடு என்கிற பெயரில் தனியார் நிறுவனங்களுக்கு தாரை வார்த்துள்ளனர். குறிப்பாக, அதானி குழுமத்தின் ஏழு நிறுவனத்தில் எல்.ஐ.சி நிறுவனத்தின் பணம் முதலீடாகச் சென்றுள்ளது.

இந்த நிலையில், அதானி நிறுவனத்தின் பல்வேறு நிதி முறைகேடுகள், மோசடிகளால் கோடிக்கணக்கான பொதுமக்களின் சேமிப்பில் இருந்து உருவான எல்.ஐ.சி, இதற்கு முன் பல ஆயிரம் கோடி இழந்த நிலையில், இரண்டு நாட்களில் 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இழப்பினைச் சந்தித்துள்ளது.

மக்களின் சேமிப்பு அதானி குழுமத்துக்குத் தாரை வார்க்கப்பட்டதற்கு எதிராக சமூக வலைதளங்களில் தென்படும் கோபம், தமிழ்நாட்டின் இந்தி எதிர்ப்புபோல வெடித்துக் கிளம்ப உள்ளது.

:ப்ளாஷ்பேக்

வாழ்வில் மறக்க முடியாத நாள்!

சு.நச்சினார்கினியன்

2015-ஆம் ஆண்டு நான் தேர்தல் நிதியாக 1,000 ரூபாயை தலைவர் கலைஞர் அவர்களிடம் அண்ணா அறிவாலயத்தில் வழங்கினேன். அப்போது அவர் “என்ன ஆயிரம்தானா, கூடுதலாகக் கொடுக்கலாமே” என்றார். எனக்காகத் தளபதி அவர்கள் “அவன் இப்போதுதான் மின் வாரியத்தில் வேலைக்குச் சேர்ந்துள்ளான், வரும் காலங்களில் நிறைய கொடுப்பான்” என்று கூறினார். தலைவர் புன்னகையுடன் என்னை வாழ்த்தினார். இருவரோடும், புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பையும் பெற்றேன். அன்றுதான், என் வாழ்வில் மறக்க முடியாத நாள்.

– **சு.நச்சினார்கினியன், இலக்கிய அணி அமைப்பாளர், நெல்லை மாநகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

கருவூலம்

தாராவியில் பெரியார்!

1940-ஆம் ஆண்டில் தந்தை பெரியார் பம்பாய் மாகாணத்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ரயில் நிலையம் முதல் வழியெங்கும் தோரணங்கள், வளைவுகள் அமைத்து, தாராவி மக்கள் பெரியாரை வரவேற்றனர். அங்கு தமிழ்க்கொடியை ஏற்றி வைத்து, பெரியார் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். அதே நாளில், பெரியாரை தனது மாளிகைக்கு அழைத்து அம்பேத்கர், தேநீர் விருந்து கொடுத்தார். சமூகப் பிரச்சினைகள் குறித்து, இருவரும் நீண்ட நேரம் பேசினர்.

திராவிடத்தால் வாழ்கிறோம்

668

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131